
திருநெல்வேலி கிழக்கு

# அருள்மிகு வெள்ளைப் பிள்ளையார் ஆலய
# மஹா கும்பாபிஷேக மலர்



255·22
வெள்ளை
SL/PR

06-04-2000

வெளியீடு: பரிபாலனசபை

கும்பாவிஷேகம் காணும் வெள்ளை விநாயகன்
அருள் உலகெல்லாம் பரவட்டும் இம்மலரும்
சிறப்புமலரட்டும் என வாழ்த்தும்

# கமலம் பல்பொருள் வாணிபம்

எல்லாவிதமான எண்ணெய் வகைகளையும் பலசரக்குப் பொருட்
களையும் குளிரூட்டப்பட்ட

## சோடா வகைகள், யூஸ், யோக்கட் வகைகளை

நியாய விலையில் தரத்துடன் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய
ஒரே ஸ்தாபனம் இதுவே

உரிமையாளர் ந. மகேஸ்வரன்

பருத்தித்துறை வீதி, நல்லூர் சந்தை

சிவமயம்

கீழைத் திருநெல்வேலியம் பதி

## அருள்மிகு வெள்ளைப்பிள்ளையார் ஆலய

# மஹா கும்பாபிஷேக மலர்



### கடவுள் வாழ்த்து

சிந்தையிறை சேர்ந்தவுயிர் பந்தமெனும் தளைகளைப்பும்
புந்திவரு புல்லறிவால் போற்றுதற்கு — வந்தணைந்து
அந்திதிறத் தந்திமுகத் தொந்திவயிற் றைங்கரனே
முந்தி வந்து முன்னின்றருளாய்.

மலர் ஆசிரியர்:

**திரு. சின்னத்தம்பி - பத்மராஜா பீ. ஏ.**

**06-04-2000**

வெளியீடு:

**வெள்ளைப்பிள்ளையார் ஆலய பரிபாலனசபை**
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.



# சமர்ப்பணம்

திருநெல்வேலி கிழக்கில் வீற்றிருந்து எம்மையெல்லாம் ஆட்சி புரியும் வெள்ளை விநாயகனுக்கு மஹா கும்பாபிஷேகம் இது எமக்கெல்லாம் பேருவகை ஊட்டுகின்றது. மிலேனியம் ஆண்டில் விஞ்ஞானம் எங்கேயோ போய்க் கொண்டு இருக்கின்ற வேளை தெய்வீகம் மறைவதுமட்டுமல்ல அப்படி ஒன்று உண்டா என கேட்கும் சந்ததிகள் உள்ளகாலம். அது மறுப்பதற்கில்லை அதற்கு விடைகூறி தெய்வீகத்தை வளர்ப்பதற்காகவே இம் மலர் பூத்துக்குலுங்குகிறது.

அன்புநெறி என்று அன்பாக அழைத்த எம் சைவத்தில் அன்பைத்தேட வேண்டியுள்ளது அன்பு குன்றினால் அகிம்சை அழிந்துவிடும். இதை புரிந்துகொள்ள வேண்டும். இன்று நடக்கும். யுத்தத்தினால் மனிதம் அழிகிறது. வறுமை, துயர், ஏக்கம், தனிமை என பலவும் எம்மை ஆட்டிப்படைக்கின்றவேளை எம்மிடையே தெய்வீகம் ஒளிரவேண்டும். இறை கருணை, அன்பு, அர்ப்பணம் தேவை, ஆம் இன்று இவை அவசியமானவையும் கூட, எனவே நாம் ஒவ்வொருவரும் ஆத்மீகம், தெய்வீகம் பற்றி சிந்திக்க வேண்டும் அதற்கு ஒரு தூண்டுதலாக இம் மலர் அமைகிறது.

எம்பெருமானின் அருளை வேண்டி அன்பு பெருகி, சமாதானம் நிலவ அவனருளாலே அவன்தாள் வணங்கி அவன் பாதார விந்தத்திற்கே அர்ப்பணிக்கின்றேன்.

மலராசிரியர்

# மலராசிரியரின் இதயத்திலிருந்து...

**விநாயக அடியார்களே,, ஆன்மீகப் பேரன்பர்களே,**
**பணிவன்பான வணக்கங்கள்.**

நல்லைக்குருமணி மற்றும் அறிஞர்கள். அரச அதிகாரிகளது பேராதர வாலும் இம் மஹா கும்பாபிஷேக மலர் இன்று மணம் வீசும் நறுமலராக உங்கள் கரங்களில் மலர்ந்துள்ளது. இம் முயற்சி எனக்குள் பொறுப்புணர்வுடன் பயத்தையே ஏற்படுத்தியிருந்தது. ஆயினும் எல்லோரது நம்பிக்கைக்கும், ஆசிக்கும் ஏற்ப சிறப்பாக இம் மலரை வெளியிடவேண்டும் என்பதே எமது எண்ணம்.

ஆயினும் யானிருக்கப் பயமேன் என்ற வெள்ளை விநாயகனின் அச்சத்தை நீக்கும் குரல் என் அந்தராத்மாவில் ஒலித்துக்கொண்டேயிருந்தது. எண்ணிய எண்ணியாங்கு எய்துவர் திண்ணியராகப் பெறின் என்பதற்கமைய நம்பிக்கையோடு என் பணியை தொடர்ந்து இலக்கை அடைந்துள்ளேன்.

இவ்வாலய மஹா கும்பாபிஷேகம் என்பது வரலாற்று சிறப்புமிக்கது நூற்றாண்டுகாலமாக இருந்து வந்த ஆலயத்திற்கு முதன்முதலாக கும்பாபிஷேகம் நடைபெறுகின்றது. மடாலயமாகவே அன்று முதல் இன்றுவரை என் நாளை வரை விளங்கும் இவ்வாலய வரலாற்றுக்குறிப்புக்களையும் விநாயகரைப் பற்றிய குறிப்புக்களையும் அடியவரது பணிகளையும் எல்லாம் தொகுத்து ஒருவரலாற்று ஆவணமாக நிலைநாட்ட பரிபாலன சபை தீர்மானித்ததால் இது கைகூடியது.

இம்மலருக்கு மன நிறைவோடு ஆசியுரை வழங்கி வாழ்த்தி நிறைவூட்டிச் சிறப்பித்த மகான்கள், பெரியோர்களுக்கும் விளம்பர உதவியை தாராள சிந்தையுடன் நல்கிய நல் இதயங்களுக்கும், ஆக்கமும் ஊக்கமும் தந்த அன்புள்ளங்களுக்கும் சிறப்புற அச்சேற்றிய அச்சகத்தாருக்கும் எல்லாவற்றுக்கும் மேலாக சிறப்புற மலர ஆசீர்வதித்த இறைவனுக்கும் என்றும் நன்றியுடையேன். இக் கும்பாபிஷேக கைங்கரியத்தில் தோள்கொடுத்த நெஞ்சங்களுக்கு எல்லாம் வல்ல வெள்ளை விநாயகனது அருட்கடாட்சம் கிடைக்க வேண்டும் எனப் பிரார்த்திக்கின்றேன்.

இக்கைங்கரியம் சிறப்புற பணியாற்றிய பரிபாலன சபையினருக்கும், சகல வழிகளிலும் ஒத்துழைத்த வானலயம்மன் சனசமூக நிலையத்தினருக்கும், என்றும் கடமைப்பட்டுள்ளேன். இதனை பெருமையுடன் நினைவு கூருகின்றேன் அடியவர்கள் இம் மலரை ஒரு வரலாற்று ஆவணமாக பெற்றுப் பேணுவார்கள் என நம்புகின்றேன்.

''என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாக தமிழ் செய்யுமாறே''

என்ற திருமந்திர வரியை உணர்வு பூர்வமாக சிந்தித்து எல்லாம் வல்ல வெள்ளை விநாயகன் பாதங்களுக்கு காணிக்கையாக்குகின்றேன்.

— மலராசிரியர் —

புனராவர்த்தன ஸம்புரோக்ஷன

# மஹா கும்பாபிஷேகம்

**04-04-2000 முதல் 06-04-2000 வரை**

**1-ம் நாள்:-** *பூர்வாங்க கிரியைகள் அதிகாலை 5-00 மணி*
**2-ம் நாள்:-** *எண்ணெய்க்காப்பு சாத்துதல் காலை 9-00 மணி*
**3-ம் நாள்:-** *மஹாகும்பாபிஷேகம் காலை 7-00 மணிக்கு*

**ஆலய பிரதமகுரு:-** சிவத்திரு ந. மதியழகன்,

**பிரதிஷ்டா பிரதமகுரு:-** *சிவப்பிரம்மஸ்ரீ. பொன் - வரதராஜக் குருக்கள்*

**சர்வபோதகம்:-** *சிவஸ்ரீ தாணு — மகாதேவாக் குருக்கள்*

**சர்வசாதகம்:-** *சிவஸ்ரீ. சோ. வரதராஜக்குருக்கள்*
*சிவஸ்ரீ. சோ. நடராஜக் குருக்கள்*

**உதவிசாதகர்:-** *பிரம்மஸ்ரீ. சுந்தர. லகுதரசர்மா*
*பிரம்மஸ்ரீ. வ. நகுலேஸ்வரசர்மா*

**குருமார்கள்:-** *சிவஸ்ரீ. கு. கமலபூசணக் குருக்கள்*
*சிவஸ்ரீ. தாணு - வாசுதேவக் குருக்கள்*
*சிவஸ்ரீ. நா. பாலசுப்பிரமணியக் குருக்கள்*
*சிவஸ்ரீ. க. ரகுநாதக் குருக்கள்*
*சிவஸ்ரீ. ச. பாஸ்கரக் குருக்கள்*

**யாகசம்ரக்ஷகர்கள்:-** *பிரம்மஸ்ரீ. வ. கேதீஸ்வரசர்மா*
*பிரம்மஸ்ரீ. வ. திவாகரசர்மா*
*பிரம்மஸ்ரீ. வ. அரிஹரசர்மா*
*பிரம்மஸ்ரீ. சோ. இராமநாதசர்மா*
*பிரம்மஸ்ரீ. இ. தயாபரசர்மா*
*பிரம்மஸ்ரீ. பா. ஸ்ரீஸ்கந்தராஜசர்மா*

**கட்டிட அமைப்பு:-** *திரு. மா. தர்மலிங்கம். திரு. சி. பத்மகுணசீலன்*

**வர்ண அமைப்பு:-** *அப்பன் ஆட்ஸ்*

**மங்கள இசை:-** *ஈழ நல்லூர் ராஜன் குழு*

**பண்ணிசை:-** *அகில இலங்கை பண்ணிசை மன்றம்*

**ஒலி ஒளி அமைப்பு:-** *றஸ்மி சவுண் சேவிஸ்*

**தொடர்ந்து 12 தினம் மண்டலாபிஷேகம், அன்னதானம் நடைபெற்று சித்திரைப் பௌர்ணமியன்று தேரு வீதியுலாவும் நடைபெறும்.**

# வெள்ளைப்பிள்ளையார் ஆலய பரிபாலனசபை செயற்குழு - 2000

**தலைவர்:**
திரு. பொ. அருளம்பலம்

**உப தலைவர்:**
திரு. அ. பரமானந்தம்

**செயலாளர்,**
திரு. சி. பத்மராஜா

**உப செயலாளர்:**
திரு செ. செல்வகுமாரன்

**பொருளாளர்:**
திரு. கா. சண்முகதாஸன்

**செயற்குழு உறுப்பினர்கள்:**
திரு. இ. சண்முகநாதன்
திரு. சி. சிவபாதசுந்தரம்
திரு. ந. அமிர்தலிங்கம்
திரு, கை. சங்கரலிங்கம்

**காப்பாளர்:**
உயர் திரு. மு. பரமேஸ்வரன்

## விநாயகர் திருவுருவம்

திருவருளே திருமேனியாக உள்ளவர் விநாயகன் சர்வவல்லபரான சிவனிடமிருந்து முதன் முதலாக எழுந்த ஒலியான ''ஓம்'' என்னும் வரிவடிவமே விநாயகனின் திருவுருவமாகும். யானை முகமும் மூன்று கண்களும் இரண்டு விசாலமான செவிகளும் ஒற்றைக் கொம்பும். ஐந்து கரங்களும், தொந்தி (பெரிய) வயிறும், இரண்டு குறுகிய வடிவமான திருவடிகளும்(பாதங்கள்)விநாயகரது திருவுருவங்களாகும். யானை முகம் பிரணவ வடிவினன் என்பதையும்; மூன்று கண்கள் சூரிய, சந்திர, அக்கினி களையும், ஐந்து கரங்களும் தானே ஐந்து கிருத்தியங்களையும் செய்பவன் என்பதையும்; இரண்டு விசாலமான செவிகளும் ஆன்மாக்களை மலவாதனை தாக்காது காத்து வினை வெப்பத்தை போக்கியருளும் என்பதையும்; தொந்தி வயிறு எல்லா அண்டங்களும் உயிர்களும் தனக்குள்ளேயே அடங்கியுள்ளன என்பதையுணர்த்துகின்றன.

# நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வரின் அருளாசிச் செய்தி

**விநாயக அடியார்களே!**

திருநெல்வேலிப் பதியில் எழுந்தருளியிருந்து அருளாட்சி புரியும் வெள்ளைப் பிள்ளையாருக்கு மஹா கும்பாபிஷேகம் நடைபெறுவதையிட்டு மனநிறைவடைகின்றோம். ஒரு ஆலயத்தில் பன்னிரண்டு வருடத்திற்கு ஒரு முறை நடைபெறுவது மஹா கும்பாபிஷேகம். மனிதராக பிறந்த ஒவ்வொருவரும் மனிதனாக வாழ்வதற்கு ஆலய வழிபாடு இன்றியமையாதது. ஆகையால் தான் ஆலயம் தொழுவது சாலவும் நன்று என்றனர் பெரியோர். எத்தலும் எம்பிரான் கோயில் புக்கு என்பது தேவாரம். கோயிலுக்கு சென்று கோயில் வழிபாட்டில் கலந்து கொள்வதன் மூலமாக மனித வாழ்வு மேன்மை அடையும் என்பதனால் அரிது அரிது மனிடராக பிறப்பது அரிது. பிறந்த பிறவியை பயனுள்ளதாக ஆக்கிக் கொள்வதற்கே ஆலயங்களில் வழிபாடுகள் சிறப்பாக நடைபெறுகின்றன. இச் சிறப்பில் வெள்ளைப் பிள்ளையாருடைய கும்பாபிஷேகத்தை தரிசிப்பது புண்ணிய பேற்றிற்குரியதாகும் ஆன்மாக்களுக்கு ஏற்படுகின்ற விக்கினங்களை களைவதன் மூலம் விநாயகராகவும் ஐந்து கரங்களை யானை முகத்தையும் கொண்ட ஐங்கரப் பெருமானை வழிபடுவதன் மூலமாக இவ்வுலக, மறுவுலக வாழ்விற்கும் விநாயக வழிபாடு இன்றியமையாதது. விநாயகரை வழிபட்டு அனைத்து மக்களும் விக்கினங்கள் நீங்கி வாழ பிரார்த்திக்கின்றோம். வெள்ளைப்பிள்ளையார் ஆலய பரிபாலன சபையினர் இன்று கும்பாபிஷேகத்தை நடத்துவதோடு வருகின்ற அடியார்களுக்கும் அன்னதானம் வழங்குவதற்காக அன்னதான மண்டபம் அமைத்து திரை நீக்கம் செய்வது பாராட்டுக்குரியது. இது போன்று சமூக சமய பணிகளை ஆலயம் செய்யவும் கும்பாபிஷேகத்தை நடாத்தும் சிவாச்சாரியார்களுக்கும் ஆலய பரிபாலன சபையினருக்கும் இவ்வூர் மக்களுக்கும் விநாயகர் அருள் புரிய பிரார்த்திக்கின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

**சிவஸ்ரீ சோமசுந்தர பரமாசார்ய ஸ்வாமிகள்**

## விநாயகர் திருவவதாரங்கள்

விநாயகனின் திருவவதாரங்கள் 12, ஆன்மாக்கள் உய்து ஈடேறும் பொருட்டு சுஜானனர், விக்கினராஜா, மயூரேசர், விநாயகர், வக்கிரதுண்டர், சிந்தாமணி, பாலசந்திரர், தூமகேது, கணபதி, மகோற்கடர், துண்டி விநாயகர், வல்லபகணேசர், என 12 அவதாரங்களை எடுத்துள்ளார்.

உ
கணபதி துணை

# வெள்ளைப்பிள்ளையார் ஆலய பிரதம குருவின் ஆசியுரை

திருச்சிற்றம்பலம்

திகட சக்கர செம்முகமைந்துளான்
சகட சக்கர தாமரை நாயகன்
அகட சக்கர வின்மணி ஆவுறை
விகட சக்கர மெய்ப்பதம் போற்றுவான்

**வெள்ளை விநாயக அடியார்களே!**

திருநெல்வேலியம் பதியிலே கருணையோடு விளங்கும் வெள்ளைப் பிள்ளையார் ஆலய மஹா கும்பாபிஷேகத்தை முன்னிட்டு ஆசியுரையை வழங்குவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

ஓம் என்னும் பிரணவமே எல்லா மந்திரங்களிலும் முதற்கண் ஓதப்பெறுவது. பிரணவ சொரூபியான விநாயகப் பெருமானுக்கே சகல கிரியைகள் சடங்குகள் பூசைகளெல்லாம் முதலில் வழிபாடியற்றுவது மரபு. எக்காரியங்களும் விக்கினங்கள் நேரிடாது செவ்வனே நிறைவுற வெள்ளை விநாயகப் பெருமானை வேண்டுகிறோம். எனவே அவருக்கு நாம் எடுக்கும் கைங்கரியங்கள் எதுவாயினும் மேன்மையுற அவன் அருளை வேண்டுகிறேன் திருநெல்வேலி கிழக்கில் செங்குந்தர் பதியில் எழுந்தருளி வேண்டுவார்க்கு வேண்டுவனவெல்லாம் கொடுத்து வல்வினையை வேரறுத்து அகிலம் சிறக்க அடியவர்கள் வயிறும் மனமும் ஒருங்கே குளிர அருள் புரிபவன் வெள்ளை விநாயகனே. காலாதிகாலமாக மடலயமாக விளங்கும் சிறப்புடையது வெள்ளை விநாயக ஆலயமாகும்.

அடக்கம், அன்பு, மனிதநேயம், விசுவாசம் இரக்கம் கொண்ட எமது பேரனான பௌராணிக வித்தகர் சின்னத்தம்பி தம்பிஐயாக் குருக்களின் பெரு முயற்சியாலேயே இந்த வெள்ளை விநாயகர் ஆலயம் நிமிர்ந்து நிற்கிறது குருக்கள் ஐயா அவர்கள் எம்மை விட்டு மறைந்தாலும் எந் நேரமும் இந்தக் கோயிலில் இருந்து எல்லோரையும் ஆசீர்வதிப்பார் என நினைத்து மனநிறைவு அடைகிறேன்.

இந்த ஆலய பரிபாலன சபையினருக்கும் இவ் ஆலயத்தை புனரமைப்பு செய்தவற்குரிய உதவிகளை மனமுவந்து செய்த அடியார்களுக்கும், மஹா கும்பாபிஷேகத்துக்கு உதவி செய்த அனைவருக்கும் எம்பெருமானின் திருவருட்கடாட்சம் கிடைப்பதாக.

**சிவத்திரு ந. மதியழகன்**
பிரதம குரு
வெள்ளைப் பிள்ளையார் ஆலயம்

# ஆசிச் செய்தி

சைவமும் தமிழும் தழைத்தோங்கும் திருநெல்வேலிப்பதி மண் வளம் மிக்கது. மண்வளம் தந்த மனவளம் இப்பகுதி மக்களுக்கு உண்டு. பார்க்குமிடமெல்லாம் நீக்கமற நிறைந்து காணப்படும் சைவாலயங்கள். அதிகாலையிலே பள்ளியெழுச்சிபாடும் ஆலயமணிகளது ஓசை. தேவார பாராயண மந்திர ஓசை காற்றிற்கலந்து (ஒலிபெருக்கி மூலம்) வியாபித்திருக்கும் பக்திமணம் பரப்பும் தெய்வீகச் சூழலிலே எழுந்தருளியிருந்து அருள்பாலிக்கும் வெள்ளைப்பிள்ளையாருக்குக் கும்பாபிஷேகம் நடைபெறுவதையறிந்து மனமகிழ்கின்றேன்.

எல்லாம் வல்ல விநாயகப் பெருமானின் திருவருள் இத் திருப்பணியை நிறைவேற்றுவர்களுக்குப் பூரணமாகக் கிடைக்க வேண்டுமென்று பிரார்த்திக்கின்றேன்.

''புல்லினால் ஒன்றுகோடி புதுமண்ணாற்பத்துக்கோடி
சொல்லுமாம் காலந்தன்னிற் செங்கல்லால் நூறு கோடி
அல்லினாய் குழலாய் கேளாய் ஆலயம் அடங்கற்கெல்லம்
கல்லினாற் சமைத்த பேர்கள் கலைவிட்டகலாரன்றே''

இவ்வாலயத் திருப்பணியை முன்னின்று நடத்தி இன்று கும்பாபிஷேகம் செய்விக்கின்ற மெய்யடியார்களைச் சைவத்தமிழ் உலகம் பின்பற்ற வேண்டும்.

''வேழமுகத்து விநாயகனைத் தொழ
வாழ்வு மிகுந்து வரும்''

**எஸ். சிவலிங்கராஜா**
தலைவர் தமிழ்த்துறை,
யாழ் பல்கலைக்கழகம்

## விநாயகர் வழிபாடு

அன்பினோடு கைமாற்றி, முட்டியாசப் பிடித்த இருகைகளால் சிரசில் மும்முறை குட்டிக் கும்பிடுவதாலும். இரு கைகளையும் எதிர் எதிராக மாற்றி (× வடிவில்) இரண்டு செவிகளையும் பிடித்தபடி, தொடையும் கணைக்காலும் ஒன்றை ஒன்று தொடும் படியாக மூன்று முறை தாழ்ந்து எழுந்து வணங்குதலே பிள்ளையார் வழிபாடு. இதனை எவரும் இலகுவாகச் செய்யலாம்.

# செங்குந்த இந்துக் கனிஷ்ட பிரிவின் முன்னாள் தலைமை ஆசிரியரின் வாழ்த்துரை

ஆன்ம கோடிகளின் மும் மலங்களைத் தீர்க்கவும் இகவரசுகம் பெறவும் பரம் பொருளாகிய இறைவன் இரண்டறக்கலந்து உலகருள் காரணனாக விளங்கும் வெள்ளைப் பிள்ளையார் திருநெல்வேலிப் பதியில் பன்நெடுங் காலமாக இருந்து தம்மை வழிபடும் அடியவர்களின் குறை தீர்த்து அருள் புரிந்து வருகின்றான்.

இத்தகைய சிறப்பு மிக்க இவ் விநாயகன் முன் உற்றால் அடியவர்கள் தூய வரர்கி மேலைத் தொல்கதி அடைவர் என்பது உண்மை இவ் ஆலயம் இன்னல் மிகு சூழ்நிலைகளைக் கடந்து இன்று புதுப் பொலிவுடன் திகழ்வது மகிழ்ச்சிக்குரிய தொன்றாகும். இக் கும்பாபிஷேகத்தினால் அடியவர்கள் பக்தி சிரத்தையுடன் வழிபட வாய்ப்புக்கிடைத்துள்ளது.

சைவ சமயத்தை சார்ந்த ஒருவன் சமய ஒழுக்கம் மிக்கவனாக விளங்க வேண்டுமாயின் அவனுக்கு சமய அறிவு ஊட்டப்படவேண்டும். இவ்வகையில் ஆலயம் பணியாற்ற வேண்டும்.

ஆலயம் புதுப் பொலிவு பெற்று விளங்குவது போல இக் கும்பாபிஷேக கைங்கரியத்தில் பங்குகொண்ட அனைவரதும் பக்தித்திறன் சிறப்பதாகுக. மக்கள் எல்லோரும் புதுவாழ்வு பெற்று வளமுடனும் இன்பத்துடனும் வாழ வெள்ளை விநாயகன் இன்னருள் சிறப்பதாகுக, மக்களது துன்ப துயரம் நீங்கி எங்கும் தெய்வீக சூழல் விளங்குவதாக.

சரவணமுத்து நடராசா
முன்னாள் தலைமை உபாத்தியாயர்
செங்குந்த இந்து கனிஷ்ட பாடசாலை

## ஆன்ம தத்துவம் அமையும் வகை

| | | |
|---|---|---|
| **பூதங்கள்** | 5 | — பிருதுவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் |
| **தன்மாத்திரைகள்** | 5 | — சத்தம், ஸ்பரிசம், ரூபம், இரசம், கந்தம் |
| **ஞானேந்திரியங்கள்** | 5 | — மெய், வாய், கண், மூக்கு, செவி |
| **கன்மேந்திரியங்கள்** | 5 | — வாக்கு, பாதம், பாணி, பாயு, உபத்தம் |
| **அந்தக்கரணங்கள்** | 4 | — மனம், புத்தி, சித்தி, அகங்காரம் |

# அரச அதிபரின் வாழ்த்து

யாழ்ப்பாணம் எங்கனும் ஆஸ்திக வாழ்வினை உணர்த்தும் செயல்கள் இடம் பெற்ற வண்ணம் உள்ளது. இவ்வகையில் திருநெல்வேலிகிழக்கு செங்குந்தா வீதியில் அமைந்துள்ள அருள்மிகு வெள்ளைப்பிள்ளையார் ஆலயம் ஆனது படிப்படியாக வளர்ச்சி கண்டதுடன் அஞ்ஞான இருளை அகற்றி ஞான ஒளியை பிரகாசிக்கும் இடமாகவும்திகழ்கின்றது. மடாலயமாக விளங்கும் இவ் ஆலயம் சிறுகுடிசையிலிருந்து அழகிய மண்டபம் கொண்ட சிறப்பான ஆலயமாக வளர்ச்சிகண்டுள்ளமை சிறப்பிற்குரியது.

இவ் ஆலயம் வரலாற்றுச் சிறப்பு மிக்க மகா கும்பாவிஷேகத்தைக் காண்பதை யிட்டு மனம் மகிழ்வதுடன் ஆலயமும் அயலும் சிறக்கவும் ஆத்மீகப்பணி தொடரவும் எல்லாம் வல்ல வெள்ளை விநாயகன் அருளால் ஆசி கூறுகின்றேன்.

**உயர் திரு. க. சண்முகநாதன்**
யாழ். அரச அதிபர்
யாழ்ப்பாணம்.

20-03-2000

---

# திருவுருவங்களை கல்லாலும், செம்பாலும் அமைப்பதேன்?

— **திருமுருக கிருபானந்த வாரியார்**

உலகில் காணப்படும் பொருள்களில் கல்லில் நெருப்பு அதிகமாகத் தங்கி இருப்பது கண்கூடு ஒரு கல்லை மற்றொரு கல்லால் தட்டினால் நெருப்பு உடனே வெளிப்படுகிறது. சிவ வேள்வி வளர்த்து வேள்வியில் எழும் சிவவொளியை நிறைகுடமாகிய கும்பத்தில் சேமித்து அக்கும்ப நீரால் நெருப்பு நிறைந்துள்ள கல் விக்கிரகமாகிய கடவுளை நிறுவினார்கள். எனவே சோதி மயமான ஒளியின் ஆற்றல் அக்கற் சிலையில் அமைந்திருக்கிறது. இதனை நம் முன்னோர் கருத்திற்கொண்டே மூலஸ்தானத்தில் அமைந்த தெய்வ உருவங்களைக் கல்லிலே அமைந்தனர்.

ஊருக்கு வெளியே அமைந்துள்ள மின் ஆற்றலை ஊருக்குள்ளே ஒளிபாச்சும் கம்பி செப்பினால் அமைத்திருப்பதைக் காண்க. செம்புக் கம்பிக்கு மின் பாய்ச்சும் ஆற்றல் உள்ளது. ஆகவே, மூலஸ்தானத்தில் சேமித்துள்ள தெய்வ மின்சார ஆற்றலை ஆன்மாக்களின் உயர்வு கருதித் திரு வீதியில் பாய்ச்சுகின்ற உற்சவ மூர்த்தியைச் செம்பினால் அமைத்தனர் நம்முன்னோர்.

நம்முன்னோர்களின் மதிநுட்பத்தை எண்ணிப் பார்க்கும் போது உள்ளம் உருகுகின்றது. இத்தகைய இந்து மதம் போதித்த உண்மைகளே இன்றைய விஞ்ஞான யுகத்திற்கு வழியமைத்திருக்கிறது. மற்றெல்லா மதங்களிலும் பார்க்க இந்து மதம் அர்த்தமுள்ள மதமாகத் திகழ்வதை யார் மறுக்க முடியும்?

---

வெள்ளைப்பிள்ளையார் ஆலய பரிபாலன சபை
உறுப்பினரும் வாலையம்மன் சனசமூக நிலைய
போஷகருமாகிய

## திரு. இ. சண்முகநாதன் அவர்களின்

## வாழ்த்துச் செய்தி

அன்பேதெய்வம் அருளே வடிவம் அன்பும் அருளும் சேர்ந்தது தான்தெய்வ வடிவம் இத்தெய்வ வடிவமாக நல்லூர் இராஜதானி அருகே திருநெல்வேலிகிழக்கிலே எழுந்தருளி அகிலமெலாம் உள்ள ஆன்மாக்களுக்கு அருள் பாலித்துக்கொண்டு வெள்ளைவிநாயகன் இருக்கின்றான் இவனருட்சிறப்பை சொல்லிலோ எழுத்திலோ சொல்லிவிடமுடியாது.

அத்தகைய இறைவனுக்கு மகாகும்பாபிஷேகம் நடைபெற அருள் பாலித்திருப்பதையிட்டும் அதனைஒட்டி மலர் ஒன்று வெளிவருவதையிட்டும் மட்டற்ற மகிழ்வடைகிறேன். மகா கும்பாவிஷேகத்தையிட்டு வெளிவரும் இம் மலர் சிறப்பாக மலர எனது ஆசிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

### ஐந்தொழில் விளக்கம்

**சிருஷ்டி** - இறைவன் ஆன்மாக்களுக்காக மாயா கருவிகளைப் படைத்து அறிவை விளக்கம் செய்தல்.

**திதி** - மாயா காரியங்களை நிறுத்தி அறிவை நிலைக்கச் செய்தல்.

**சங்காரம்** - மாயா கருவிகளை ஒடுக்கி அறிவைப் போக்குதல்.

**திரோபவம்** - அருளைக் கொண்டு மலருத்திகள் மூலம் ஆன்ம அறிவை மறைப்பித்துக் கன்மங்களை நிறுத்துதல்.

**அருள்** - ஆன்மாக்களுக்கு இன்பதுன்புங்களைப் புசிப்பித்து வினைகளை அறுத்தல்.

# ஆலய பரிபாலனசபைத் தலைவரது வாழ்த்துரை

''வெள்ளைக் கொம்பன் விநாயகனைத் தொழ
துள்ளி ஓடும் வினை''

என்பதற்கிணங்க எங்கள் ஊரில் அருள்பாலித்து வந்த வெள்ளைப் பிள்ளையார் ஆலயம் கடந்த கால இராணுவ நடவடிக்கையின் போது பலத்த சேதத்திற்குள்ளாகி இன்று புதுப்பொலிவுடன் தோற்றம் அளிக்கிறது என்றால் அதுவும் அவன் செயலே.

இப்புனித கைங்கரியத்திற்கு நிதியுதவியை வாரி வழங்கிய வள்ளல்களுக்கும், பொருளுதவி வழங்கிய பெரியார்களுக்கும், திருத்தொண்டில் பங்களித்த அயலவர்களுக்கும் குறிப்பாக வாலையம்மன் சனசமூக நிலைய இளைஞர்களுக்கும் ஏனையோருக்கும் நன்றி கூறுவதுடன் வெள்ளைப்பிள்ளையார் அருள் கிடைக்க அவனருளால் அவன் தாள் வணங்கி திருவும் கல்வியும் சீரும் தழைக்கவும் வெள்ளை விநாயகனை வேண்டுகிறேன்.

பொ. அருளம்பலம்
*தலைவர்*



## ஆணவ இயல்பு

விகற்பம், கற்பம், குரோதம், மோகம் கொலை, அஞர், மதம், நகை

உ
சிவமயம்



# கும்பாபிஷேக பிரதம குருவின் ஆசியுரை

*திருவாக்கும் செய் கருமம் கைகூடும் செஞ்சொல்*
*பெருவாக்கும் பீடும் பெருக்கும் — உருவாக்கும்*
*ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைச்*
*காதலால் கூப்புவர் தம் கை.*

சிவபூமி எனபோற்றப்படும் இலங்கையின் வடபால் அமைந்து இருக்கும் திருநெல்வேலி எனும் கிராமத்திலே எழுந்தருளியிருக்கும் வெள்ளைப்பிள்ளையாருக்கு மகாகும்பாபிஷேகம் என்பதைக் இட்டு பெருமகிழ்சியடைகிறேன்.

ஓம் எனும் பிரணவத்திலிருந்து வேதங்கள் தோன்றின பிரணவமே எல்லாத் தேவைகளின் பிறப்பிடம் உலகத்தின் தோற்றத்துக்கும் ஒடுக்கத்துக்கும் பிரணவ மந்திரமே காரணமாகும். பிரணவ சொரூபமாக திகழ்பவர் விநாயகப்பெருமான்

இத்தகைய விநாயகப்பெருமானது திருவடித் தாமரை மலரினை வழிபட்டு எல்லோரும் விநாயகப்பெருமானது பேரருளைப் பெறுவோமாக.

''சிவாகம கிரியா சிரோண்மணி''
பொன் வரதராஜக் குருக்கள்
வீரபத்திரர் தேவஸ்தானம் கல்வியங்காடு.

# விநாயகரருள் கிடைப்பதாக,

திருநெல்வேலி கிழக்கில் சைவமும் தமிழும் செழிந்தோங்கும் நற்பதியில் நம்பிக் கையுடன் அருள்புரியும் வெள்ளை விநாயகர் கடந்த இருநூற்றாண்டுகளுக்கு மேலாக எழுந்தருளி அருளாட்சி புரிந்து வருகிறான். எம்குல மூதாதையராகிய கந்தையா சின்னப்பிள்ளையினால் இவ் ஆலயம் ஸ்தாபிக்கப்பட்டு ஓலைக்குடிசையில் இருந்து வந்தது. பின்னர் செல்லையா-தையல்நாயகி இவ்வாலயத்தை நிர்வகித்து வந்துள்ளார். இக்காலத்தில் சீனிவாசகம்-சின்னம்மா அவர்கள் அடியார்களின் பேருதவியுடன் வெள்ளைப்பிள்ளையாரின் பழமையான மூலஸ்தானத்தை கல்லினால் கட்டிடம் கட்டியும், கிணறு வெட்டியும் ஒத்துழைப்பு நல்கினார். இவ்விநாயகர் அருவுருவ விநாயகராக அருள்பாலித்துக் கொண்டிருக்கும்போது கச்சேரி–நல்லூர் வீதி முத்திரைச்சந்தையடியில் ஓர் அன்பரின் வீட்டில் கிணறு வெட்டும்போது உருவவிநாயகர் கிடைத்தது.

இவ் விநாயகரை இளையதம்பி முதலியார் கொண்டு வந்து செல்லையா–தையல்நாயகியிடம் வெள்ளைப்பிள்ளையார் ஆலயத்தின் மூலஸ்தானத்தில் வைக்கும்படி கேட்டதற்கிணங்க உருவவிநாயகர் வைக்கப்பட்டது.

இவ்வாலயத்தின் மூலஸ்தானத்தில் அருவுருவவிநாயகராகிய வெள்ளைப் பிள்ளையாரும், உருவவிநாயகரும், வைரவரும் பரிவார மூர்த்திகளும் ஒருங்கேயிருந்து அருள்பாலித்து வருகின்றனர். பின்னர் செல்லையா–சதாசிவம் வெள்ளைப் பிள்ளையார் கோவிலை நிர்வகித்து வருங்காலத்தில் அமரர் திரு சி.தம்பிஐயா அவர்கள் சடையம்மாவின் ஞாபகார்த்தமாக நாயன்மார்களின் குருபூசை வழங்கப் பட்டது. பின்னர் இன்று இவ்வாலயம் வரலாறு காணாத வளர்ச்சி பெற்று மகா கும்பாவிஷேகம் காண்பதில் மகிழ்வடைகின்றேன். விநாயகரருள் அனைவருக்கும் கிடைப்பதாக,

செ. சதாசிவம்
வலி-கிழக்கு பிரதேச சபை
உப அலுவலகம்
கோப்பாய்.

# வெள்ளைப் பிள்ளையார்

திருநெல்வேலி கிழக்கில் பல வருடங்களுக்கு முன் செங்குந்த மரபு அடியாரினால் வெள்ளைப்பிள்ளையார் ஒரு சிறிய குடிலில் இதய சுத்தியுடன் பூசிக்கப்பட்டது. அம்மரபில் வந்தோர் அதே இதயசுத்தியுடன் வெள்ளைப்பிள்ளையாரை ஆராதித்தனர். மிக நெடுங்காலம் பூசகராக இருந்து அண்மையில் அமரரான தம்பியையாக்குருக்கள் அவர்களே தன்னையே அப்பெருமானுக்கு அர்ப்பணித்தவர்.

இந்த ஆலயத்தின் தனிச்சிறப்பு குடியிருக்கும் மூலஸ்தானத்தில் அடியார்கள் எவரும் சென்று கண்டு ஸ்பரிசித்து பேரானந்தம் கொள்ளலாம் மற்றைய சிறப்பு அடியார்கள் வருடம் முழுவதும் தாமே எவருடைய வேண்டுகோளும் இல்லாமல் மோதகப்பூசை, பொங்கல், அன்னதானம் செய்து கொண்டே இருக்கிறார்கள்.

இந்த ஆலயம் மிகச்சிறிய நிலப்பரப்பிலேயே அமைந்துள்ளது. இருந்தபோதும் தற்போதுள்ள பரிபாலன சபை தூரநோக்கில் நல்ல முறையிலேயே திட்டமிட்டு புனருத்தாரண வேலைகளை செய்ததோடு அல்லாமல் அன்னதான மடமொன்றையும் கட்டியுள்ளனர். பாராட்டிப் போற்றவேண்ட விடயம் இது.

வெள்ளைப்பிள்ளையார் வலிமைமிக்கவர். நியாயமான வேண்டுதலை நிறைவேற்றி வைப்பவர் எளிமையானவர் அவருடைய பலமே இந்த எளிமைதான். ஆடம்பரமோ ஆரவாரமோ இல்லாதவர் விரும்பாதவர்.

இன்று இந்த ஆலயத்திற்கு கும்பாபிஷேகம் நடைபெறுகின்றது. முன்னம் இருந்ததைப் போல எளிமையும் கெடுபிடிகளும், கேளிக்கைகளும் இல்லாமல் பக்தர்கள் பிள்ளையாரைத்தரிசிக்க தற்போதைய பரிபாலனசபையினரும் இனித்தொடர்ந்து வரப்போகும் பரிபாலன சபையினரும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென வெள்ளைப்பிள்ளையாரை இதய பூர்வமாக இறைஞ்சுகின்றேன்.


**மு. பரமேஸ்வரன்**
(முன்னாள் அதிபர்)
யா/செங்குந்த இந்துக் கல்லூரி

# இறைவனை வேண்டுதல் செய்வோம் வாரீர்

ஒரு நாட்டின் பண்பாட்டுப் பாரம்பரியத்தை அங்கு எழுந்தருளியுள்ள தெய்வத் திருநிலைகளைக் கொண்டே அறியலாம்.

யாழ்ப்பாணம் திருநெல்வேலிக் கிராமம் தென்னிந்தியாவிலுள்ள தாமரபரணியார் வனம் பெரும்பதியாகிய திருநெல்வேலியிருந்து புலம் பெயர்ந்த குடியேற்றம் என்பர். ஆகவே தென்னிந்தியத் தெய்வப்பண்பாட்டின் செழிப்பை யாழ்ப்பாணத் திருநெல்வேலியில் காணமுடிகிறது.

இன்று பல கோவில்களில் கும்பாவிஷேகங்களோ பெருவிழாக்களோ நடாத்தப்படுவது சகசமாயிற்று. இதனால்தானோ இன்னல் மத்தியிலும் எம்மால் வாழமுடிகிறது.

அருள்மிகு வெள்ளைப்பிள்ளையார் ஆலய புனராவர்த்தன ஸம்புரோஷ்ஷன மகா கும்பாபிஷேகம் இறையருளால் நடைபெற இருப்பது தெரிந்து பெருமகிழ்ச்சியடைகின்றேன். இத் தெய்வத் திருப்பணியில் அடியார்கள் மன, மொழி, மெய் மூன்றும் ஒருமித்து தொண்டு செய்து பிறவிப் பெரும் பயனை எய்த வேண்டுமென்று பிராத்திக்கின்றேன்.

பா.செந்தில்நந்தனன்
பிரதேச செயலகம்
நல்லூர்

*27-03-2000*

**வித்தியா தத்துவம்**

*காலம், நியதி, கலை, வித்தை, அராகம், புருடன், மாயை*

# இம் மலர் தெய்வ மணங்கமழும் வாடாத மலராகட்டும்

யாழ்ப்பாணம், திருநெல்வேலி கிழக்குக் கிராமத்தில் அமைந்துள்ள மிகவும் பழமைவாய்ந்த, வெள்ளைப்பிள்ளையரர் திருத்தலம், பன்னெடுங்காலமாக, விநாயகப்பெருமான் எழுந்தருளி அருள்பாலிக்கும் அற்புதத்தலமாக விளங்குகின்றது.

மனிதனுக்குச் சாந்தியையும், மகிழ்ச்சியையும் அளித்து, ஆனந்தப்பெருவாழ்வுக்கு வழியமைக்க இவ்வாலயம் முக்கிய இடத்தை வகிக்கின்றது.

இத் தேவஸ்தானத்தின் அறங்காவலர் சபையின் பெருமுயற்சியால, இவ்வாலயத்தின் புனருத்தாரனத் திருப்பணி வேலைகள் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டு, குடமுழுக்குத் திருவிழா நடைபெறுவதையிட்டு, மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். மேற்படி குடமுழுக்குத் திருவிழா நடைபெறுவதையிட்டு நினைவு மலர் ஒன்றினை வெளியிடயிருப்பது சாலவும் பொருத்தமானதாகும். குடமுழுக்குத் திருவிழா சிறப்பாக நடைபெறவும், இவ்வாலயத்தில் எழுந்தருளியுள்ள வெள்ளை விநாயகனின் அருள் அடியார்களுக்கு இஷ்ட சித்திகளை அளிக்க வேண்டும் என்றும் பிரார்த்திக்கின்றேன். குடமுழுக்கு விழா நினைவாக வெளிவருகின்ற இந் நினைவுமலர் தெய்வமணங்கமழும் வாடாத வண்ண மலராகப் பொலிவுடன் விளங்க எல்லாம் வல்ல விநாயகப்பெருமானின் அருளைப் பணிவுடனும், அடக்கத்துடனும் வேண்டி நிற்கின்றேன்.

ஓர் ஊரில் கோவில்கள் அழகுற அமைக்கப்பட்டு பரிபாலிக்கப்பட்டு வருகின்றன வென்றால் அந்த ஊர்பண்பாட்டால் உயர்ந்த ஊர் என்பது அர்த்தம் எனவே கோவில்களைக் கட்டினால் மட்டும் போதாது அவற்றைச் சிறந்த முறையில் பரிபாலித்து அருட்சக்தி நிறைந்தவையாக நாம் வளர்க்க வேண்டும்.

நற்றமிழ் வல்ல நாவுக்கரசப் பெருமான் இதனை "திருக்கோவில் இல்லாத திருவியல் ஊரும்" என்ற தேவாரத்தில் அழகாகக் கூறுகின்றார். ஆகவே இவ் ஆலயத்தில் நித்திய பூசைகள் செம்மையாக நடைபெறவேண்டும் திருநீற்றின் ஒளி அங்கு வீசவேண்டும்.

மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகம் எல்லாம்.

**சி. கனகரத்தினம்** - ஜே. பி. யு. எம்
தலைவர் - திவ்விய ஜீவன சங்கம்
யாழ்ப்பாணம்.

# வெள்ளைப்பிள்ளையாரை வாழ்த்துகிறோம்

திருநெல்வேலி அருள்மிகு வெள்ளைப்பிள்ளையார் ஆலயம் பல இலட்சம் ரூபா செலவில் புனருத்தாரணம் செய்யப்பட்டு மகாகும்பாபிஷேகம் நடைபெறுவதை அறிந்து மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

இவ்வாலயத்தை சூழவுள்ள மக்கள் சிறுவர் முதல் பெரியோர் வரை தொண்டர்களாக விளங்கினார்கள். இவர்களது முயற்சியினாலும் எல்லாம் வல்ல வெள்ளைப்பிள்ளையாரது அருளினாலும் இவ்வாலய கும்பாபிஷேகம் சிறப்பாக நிறைவெய்தியது.

போர்த்துக்கேயர் ஆட்சிக்காலத்தில் எமது சமயத்தைக் காப்பாற்றிய பெருமை சைவக்குருமாரையே சாரும். இவ்வாலயம் ஆரம்பகாலம் தொடக்கம் இன்று வரை அவர்களால் பக்திபூர்வமாக பூசை செய்துவருவது பெருமைக்குரியதாகும்.

எல்லாம் வல்ல வெள்ளைப்பிள்ளையாரது மகாகும்பாபிஷேகத்துடன் அடியார்களது வாழ்வில் சாந்தி சுபீட்சம் சமாதானம் குறையாத செல்வம் பெருக வெள்ளைப்பிள்ளையார் பேரருள் புரிய வேண்டும் எனப் பிரார்த்திக்கின்றேன்.

மகாகும்பாபிஷேகப் பெருவிழா இனிது நிறைவெய்தவும் கும்பாபிஷேகமலர் சிறப்புறவும் எல்லாம் வல்ல வெள்ளைப்பிள்ளையாரது பாதார விந்தங்களை பிரார்த்தித்து எனது வாழ்த்துக்களையும் நல்லாசிகளையும் வழங்குவதில் நான் பெருமைப்படுகிறேன்.

''வேழமுகத்து விநாயகனைத் தொழ
வாழ்வு மிகுந்து வரும்''

**இ. இராசலிங்கம்**
கிராம அலுவலகர்
திருநெல்வேலி தென் கிழக்கு

திருநெல்வேலி கிழக்கு அருள்மிகு
வெள்ளைப்பிள்ளையார் ஆலய

# கும்பாபிஷேக மலருக்கான வாழ்த்துச் செய்தி

எமது ஊரில் வாழ்ந்த மக்களுக்கும் தற்போது வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களுக்கும் என்றும் அருள் சுரந்து கொண்டிருக்கும் வெள்ளைப்பிள்ளையாருக்கு இன்றைய தினம் புனருத்தாரணம் செய்யப்பட்டு ஆலயம் சிறப்புடன் அமையப்பெற்று கும்பாபிஷேகம் நடைபெறுவதைக் காண்பதற்கு நாம் அனைவருமே பாக்கியம் செய்தவர்கள் என்பதில் ஐயமேயில்லை.

1995ம் ஆண்டு இறுதிக்காலத்தில் மக்கள் அனைவரும் இடப்பெயர்வுக்கு ஆளான போது இவ் ஆலய புனருத்தாரண வேலைகள் இடைநடுவில் தடைப்பட்டது. இத்தடையானது எமக்கு ஒரு அதிசயமாகவே அப்போது தோன்றியது. ஏனெனில் மக்கள் அனைவருமே தமது வேலைகளை தடையின்றி நிறைவேற்ற வெள்ளைப்பிள்ளையாரை வேண்டுதல் செய்கையில் அவரது ஆலய புனருத்தாரண வேலைகளே தடைப்பட்டது உண்மையில் வியக்கத்தக்கது. ஆனால் விநாயகரது எண்ணம் வேறாக இருந்தது. உண்மையில் 1995 இறுதிக்காலத்தில் ஏற்பட்ட யுத்த நிலைமைகளில் ஊரில் பல சேதங்கள் ஏற்பட்டதும் ஆலயத்திற்கு சேதம் ஏற்பட்டதையும் இப்போது நினைத்துப் பார்க்கையில் வெள்ளைப்பிள்ளையாரது எண்ணம் புலனாகிறது. இவ் யுத்த நிலைகளிலும் ஆலயத்தின் மூலஸ்தானம் எவ்வித சேதமும் அடையாததும் விநாயகனது பெருமையைக் கூறும் விடயமாகும்.

1996ஆம் வருடம் எமது மக்கள் மீண்டும் திரும்பி வந்து இவ் ஆலயத்தை சீர்படுத்தி பூசைகளை ஆரம்பித்தார்கள் மேலும் ஆலய புனருத்தாரண பணிகளை தொடர முயன்றபோது தடைகள் எதுவும் இன்றி பணிகள் மிக வேகமாக நடந்து ஆலயம் சிறப்புடன் இன்று விளங்குவது வெள்ளைப்பிள்ளையாரது அருளேயன்றி வேறொன்றில்லை.

சென்ற காலங்களில் எமது ஊரில் வாழ்ந்து தற்போது வேறு ஊர்களிலும் வெளிநாடுகளிலும் வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களையும் இன்று கூட ஈர்த்துக்கொண்டிருக்கும் வெள்ளைப்பிள்ளையாரை இலகுவில் யாரும் மறக்கமுடியாது என்பது அனுபவஉண்மை! பல சந்தர்ப்பங்களில் பெருமானது அருளை நாம் பெற்றிருக்கின்றோம் எதிர் காலத்திலும் எம் பெருமான் அனைவருக்கும் அருள் பாலிப்பான் இதில் சந்தேகமேயில்லை,

வ. ஸ்ரீதரன்
உதவிப்பதிவாளர்
யாழ். பல்கலைக்கழகம்

## கீழைத் திருநெல்வேலியம் பதியுறையும்
# அருள்மிகு வெள்ளைப்பிள்ளையார் ஆலய தோற்றமும் வளர்ச்சியும் ஒரு நோக்கு

சைவ வழிபாடும் தமிழர் வரலாறும் தொன்மையானது. இன்று ஈழத்தில் பல சமயங்கள் நிலவி வருகின்றன. ஆயினும் சைவ சமயமே ஆதி புராதமான காலம் தொட்டு விளங்கி வருகின்ற சமயமெனும் வரலாற்றுப் புகழுடையது. இத் தகைய சைவம் முலப் பரம்பொருளாக சிவனை வழிபடுகின்றது. இதனாலேயே திருமூலர் ஈழத்தை சிவ பூமி என சிறப்பித்துள்ளார். இத்தகைய சிவ பூமியின் வடபால் யாழ்ப்பாண நன்னகருகே நல்லூர் இராஜதானிச் சூழலில் விளங்குகின்ற சீர் மிகு கல்விச்சாலைகளையும், அற நிலையங்களையும், மடங்களையும் தர்மஸ் தாபனங்களையும், வைத்திய சாலைகளையும் கொண்டு விளங்கும் கீழைத் திரு நெல்வேலியம் பதியில், செங்குந்த வீதியில் எழுந்தருளிய "வேளமுகத்து வீநா யகனை தொழ வாழ்வு மிகுந்து வரும் வெள்ளைக் கொம்பன் விநாயகனைத் தொழ துள்ளி ஒடும் வினைகளே" என அருள் புரிபவனே வெள்ளைப் பிள்ளை யார் ஆவார்.

தல வரலாறு பற்றிய ஆய்வுகளானவை ஒரு நாட்டினுடைய அல்லது ஒரு பிர தேசத்தினுடைய கலாசார மரபுகளை வெளிக் கொணருவதாக அமையும். ஏனெ னில் தென் கிழக்காசிய மக்களது வாழ்வு முறையானது வரலாற்றுக் காலம் தொடக்கம் இற்றைவரை தலங்களையே மையமாக கொண்டு, தோற்றம் பெற்று வளர்ச்சியடைந்து கொண்டமையுமே அதன் அடிப்படைக் காரணியாக அமைந் தது. இவ் வகையிலே மதமும் மனித வாழ்வும் பழமும் சுவையும் போல இணைந் துள்ளது. இதனை மக்களது கலை, வாழ்வு பற்றி ஆராயும் போதுணர முடியும். எனவே மக்களது வாழ்வுடன் இரண்டறக் கலந்தவையாக ஆலயங்கள் விளங்கு கின்றன.

எனவே தான் நாவுக்கரசரும் கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்றார் இந்த வகையிலே திருநெல்வேலி கிழக்கிலே செங்குந்தர் பதியில் எழுந் தருளி எட்டுத் திக்கும் அருளாட்சி புரிந்து வருகின்றார். வெள்ளை விநாயகன் இவ் ஆலய வரலாறு நெடியது ஓர் ஆலயமானது. மூர்த்தி, தலம், தீர்த்தம் விருட்சம் ஆகிய அம்சங்களால் சிறப்படைகிறது. இவ் வகையிலே அருள்மிகு வெள்ளைப் பிள்ளையார் ஆலயமானது மூர்த்தி விசேடமுடையது. நாடி வரும் அடியவரின் வினைகளையெல்லாம் வேரோடகற்றி நம்பிக்கையோடு அவன் தும்பிக் கையை பிடிப்பவர்களுக்கு காரியமெல்லாம் சித்திக்கச் செய்து திருவாக்கும் செய் கருமம் கைகூடும். பிள்ளையாரை வணங்கி எக்கருமமும் துணிந்தால் நிட்சயம் வெற்றியளிக்கும். பொல்லாப் பிள்ளையாரை நம்பிய நம்பியாண்டார் நம்பியைப் பிள்ளையார் எவ்வாறு காப்பாற்றினாரோ அது போல் எம் வெள்ளைப் பிள்ளை யாரையும் வணங்கி வெற்றிபெற்றவர்கள் பலராவர்.

இத்தகைய வெள்ளைப் பிள்ளையார் எப்படி இங்கே எழுந்தருளினார். யாரால் ஸ்தாபிக்கப்பட்டார் என்பதற்கு இங்கு பலரும் பல்வேறு விதமான கருத்துக்களை முன்வைக்கின்றனர். அதில் பலராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு வந்த கருத்து இப்போது உள்ள மூல விக்கிரகமாகிய உருவ வடிவில் அமைந்த விநாயகனுக்கு அருகே வைத்து வழிபடப்படும் அருவுருவ வடிவாகிய விநாயகனையே ஆரம்பத்தில் வைத்து வழிபட்டு வந்தனர் எனவும் நூற்றாண்டு காலத்திற்கு முன் இவ் ஆலய அயலைச் சேர்ந்த அடியவரொருவர் நல்லூர் இராஜதானிப் பகுதியில் தொழில் நிமித்தம் சென்ற போது வீட்டின் அருகே மூலமூர்த்தியாக உள்ள விநாயகர் விக்கிரகம் கிடக்கக் கண்டு அது பற்றி அவ்வீட்டாரிடம் விசாரித்தபோது தாம் நிலத்திலே கிணறு வெட்டியபோது கிணற்றுக்குள் இருந்து கிடைத்தது எனவும் அதை எடுத்து வைத்து வழிபடுவதாகவும் கூறினார்கள். எனவே அப்பெரியவர் அவ் விக்கிரகத்தை அவர்களிடமிருந்து பெற்று வந்து மூலஸ்தானத்தில் வைத்து வழிபட்டு வந்தார் எனக் கூறப்படுகிறது.

மறுபுறம் செம்மணிப் பகுதியை அண்டிய நாயன்மார் குளத்தை ஆழமாக்கும் போது கிடைத்ததாகவும் அதையே அவ் வீட்டார் வைத்திருக்க பெற்று வந்ததாகவும் கூறப்படுகின்றது. எனவே மேற்படி விடயங்களைக் கொண்டு நோக்கும் போது யாழ்ப்பாணத்து மன்னராட்சிக் காலத்தினைச் சேர்ந்ததாக இருக்கலாம் என எண்ண முடிகின்றது. எனவே மிகவும் தொன்மையான விக்கிரகம் இது என்பது தெட்டத் தெளிவாகின்றன போதும். காலம் ஆய்வுக்குரிய ஒன்றாகவே உள்ளது. ஆயினும் நல்லூர் ராஜதானிக்கு அருகில் நிலத்துள் அகழ்ந்து எடுக்கப்பட்டதால் யாழ்ப்பாண ராச்சியம் நல்ல நிலையில் இருந்தபோது ஏதாவது ஒரு முக்கியமிக்க கோவிலில் வைத்து பூசிக்கப்பட்டிருக்கலாம் எனவும் பின்னர் அன்னியராட்சிக் காலத்தில் இந்து மதம் நலிவுற்று அழிக்கப்பட்ட வேளை யாராலும் நிலத்துள் புதைக்கப்பட்டிருக்கலாம், அல்லது தூக்கி வீசப்பட்டிருக்கலாம் என கருத முடிகின்றது. இவ் விக்கிரக அமைப்பு முறையை உற்று நோக்கும் போது நல்லூர் ராஜதானிக் கோவிலில் ஒன்றான சட்டநாதர் ஆலய விநாயகர் உருவினை ஒத்ததாக உள்ளதால் அக்காலத்தைச் சேர்ந்தது என உறுதியிட்டு கூறப்படுகின்றது.

இப்படிப்பட்ட இறைவனுக்கு வெள்ளைப்பிள்ளையார் பெயர் வரக் காரணம் யாது என ஆய்வு ரீதியாக நோக்கும் போது இது காரணப் பெயராக இருக்கலாம் என கருதப்படுகின்றது. வெள்ளத்துள் கிடந்தபடியாப் அல்லது வெள்ளைக் கல்லினால் செய்யப்பட்டபடியால் இப் பெயர் வந்திருக்கலாம் என கருதப்படுகின்றது. வெள்ளைக் கல் விக்கிரகத்தை காண்பது அரிது அதில் இவ் வெள்ளைக் கல் விக்கிரகத்தின் துதிக்கை இடப்புறமாக திரும்பி இருப்பதும் இப்படியான விக்கிரகத்தை காண்பதும் அபூர்வமே, அத்துடன் அருவுருவ வடிவமுடைய விநாயகர் உருவினையும் பிரதிஷடை செய்துள்ளதும் அபூர்வமே இது இத் தலத்திற்கே உரிய தனிச் சிறப்பாகும்.

ஒவ்வொரு நெஞ்சத்தார் மனதிலும் வெள்ளை உள்ளம் கொண்ட பிள்ளையார் உறைந்து விட்டார் கள்ளமற்ற உள்ளங்களில் உறைந்த விநாயகனை கூப்பிடாத அடியவரில்லை ஊரவர் மத்தியில் எதனை மேற்கொள்ளும்போதும் இவன் பெயர் உச்சரிக்கப்படுமென்பதில் தவறில்லை. அடியவருடன் ஒன்றித்து விட்டமைக்கு பல காரணங்கள் உள வெள்ளைப் பிள்ளையார் ஆலயமானது ஆகமுறை சாராத ஒரு மடாலயமாகும். இதற்குரிய மாண்புகள் சொல்லில் அடங்காதவை. ஆதியில் இலந்தை மர அடியில் வைத்து சிறு குடிசையமைத்து நாலு கிடுகுகளினால் வேயப்பட்டிருந்த ஆலயம் படிப்படியாக வளர்ச்சி பெற்று மூலஸ்தானத்தை மட்டும் கொண்ட சிறு ஆலயமாக பரிணமித்தது. இதன் அருகே வீதியோரம் பாரிய வேப்பமரமொன்று கிளை பரப்பி குளிர்மை நல்கி அடியவர்க்கு ஆறி அமர இடமளித்தது.

பின்னர் இவ்வாலயத்தினை சற்று விரிவாக்க திட்டமிடப்பட்டது. பிள்ளையாரின் கருணை கை கூடவே அருகிலே ஒரு அறிவாலயமும் ஸ்தாபிக்கப்பட்டது. எனலாம் ஏனெனில் இவ் வாலையம்மன் சனசமூக நிலைய இளைஞர்களால் நடாத்தப்பட்ட கலாஜோதி நாடக மன்றத்தினர் ஆலய வளர்ச்சிக்கென நாடகத்தை மேடையேற்றி அந்த நிதியை கொண்டு ஆலயத்தை நிர்வகித்து வந்த சீனிவாசகம் சின்னம்மா என்பவருடன் இணைந்து முன் மண்டபம் அமைத்தனர், இவ் மண்டபத்துடன் வளர்ச்சி பெற்ற ஆலயம். வெள்ளைப் பிள்ளையார் ஆலயத்தில் விழுந்து கும்பிட இடமில்லை என்ற பழமொழியை பொய்ப்பித்து வளர்ச்சி பெற்றது.

ஆலய வளர்ச்சியானது நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமும் மேன்மையுற்றது. அடியார்கள் அன்பு,பக்தி எல்லையைக் கடந்தது. இவ் ஆலயத்தில் அற்றைநாள் முதல் இற்றை நாள் வரை செங்குந்த குல ஒழுக்க சீலர்களே ஆசாரத்துடன் பூசை நடாத்தி வருகின்றனர். இவ்வாலயத்தில் நடக்கும் பூசைகள், பிரார்த்தனைகள் திருவிழாக்களைப் பார்த்தால் தெரியும். அடியவர்கள் இவ்வூர் பக்தர்கள் எவ்வளவு தூரம் பிள்ளையாருடன் ஒன்றித்துள்ளார்கள் என்பதை இவ்வாலைய மூலமூர்த்தி அறை எப்போதும் பூட்டப்படுவதில்லை யாரும் பூசைகளை இயற்றலாம் பூசிக்கலாம் தடையில்லை, ஏனைய ஆகம முறை சார்ந்த ஆலயங்களில் உள்ள முறைகள் இங்கு இல்லை அபிஷேகம் கூட ஒருவர் செய்து விட்டுப்போக மீண்டும் மற்றவர் செய்ய... இப்படியே பூவும் பூசையும் ஆராதனையும் அவரவரே செய்யும் சிறப்புண்டு. எல்லோரும் இப் பக்தியில் இணைவதால் அன்பு கூடி ஆத்ம திருப்தியும் ஏற்படுகின்றது.

இப்படிப்பட்ட ஆலயமானது படிப்படியாக வளர்ச்சியுற்ற போதே அமரர் சிவஞானம், பதுமநாயகமுதலி, மார்க்கண்டு, கருணாநிதி, ஸ்ரீகந்தசாமி, போன்றவர்களும் பூசை செய்தனர் பின்னர் அமரர் தம்பிஐயா குருக்கள் அவர்கள் இவ் ஆலயத்துடன் தன்னை இணைத்து பணியாற்றினார். இவரது காலத்திலே தான் ஆலயத்

திலே சடையம்மா மடம் ஒன்று ஸ்தாபிக்கப்பட்டு அன்னதான முறை ஏற்படுத்தப்பட்டது அதுவரை மோதக பூசையுடன் இருந்த ஆலயத்தில் 63 நாயன் மார்களது குரு பூசைமுறையும் ஏற்படுத்தப்பட்டு. படிப்படியாக மண்டபங்கள் போடப்பட்டு வைரவர், சிவன், அம்பிகை, முருகன் போன்ற தெய்வங்களும் பிரதிஷ்டை செய்யப்பட்டன. அமரர் செ. கைலாசபிள்ளை அவர்களது உபயமாக ஒரு சடையம்மா மடம் அமைக்கப்பட்டது. இவ்வாறு பரிணாம வளர்ச்சி கண்ட ஆலயத்தில் சுமங்கலிப் பூசை, நவராத்திரி பஜனை, பிள்ளையார் கதைப்படிப்பு, கந்த, பெரிய புராணப்படிப்பு, திருவெம்பாவை, சித்திரைக் கதைப்படிப்பு என்பனவும் சிறப்பாக நடைபெறுகின்றன. இவ் ஆலயத்தில் விநாயகர் திருவுருவம் அமைக்க பாடுபட்டவர்களில் திரு. ச. நடராசா அமரர்களாகிய நாவற்குழி சின்னையா, சி. தம்பிஐயா ஆகியோரின் பணி மகத்தானது. 1980-களில் எழுந்தருளி விநாயகர் உருவம் ஐம்பொன்னினால் வார்க்கப்பட்டு தெரு வீதியுலா கொண்டுவரப்பட்டு அலங்கார உற்சவ முறை ஏற்படுத்தப்பட்டது.

1987-களில் வாலையம்மன் சனசமூக நிலையத்தினால் 1½ பரப்பு காணி வாங்கி அன்பளிப்புசெய்யப்பட்டது. வெள்ளைப் பிள்ளையார் ஆலயத்தை ஒட்டி என்னாளும் இளைஞர் குழு ஒன்று இருந்தபடியே இருக்கும் இவர்கள் ஆலயத்தொண்டில் தம்மை அர்ப்பணித்து வருவதை காணமுடிகின்றது. குழந்தையும் தெய்வமும் கொண்டாடும் இடமாகவும் இவ் ஆலயம் திகழ்கின்றது. அவரும் இவர்களுடன் இணைந்து வாழ்ந்து வாழ்வித்துக் கொண்டிருப்பதைக் காணமுடிகிறது. இவ்வாலயத்தில் பக்திப் பரவசமே அதிகம். பாசமே உயர்ந்து நிற்கின்றது. இத்தகைய சிறப்புக்கும் உரிய ஆலயமாக விளங்கும் இவ் ஆலயம் கடந்த கால இடப்பெயர்வுகள் அனர்த்தங்களின் போது சேதமடைந்தது. 90-ம் ஆண்டளவில் புனருத்தாரணம் செய்யப்பட்டு பூர்த்தியடையாத நிலையில் இருந்த ஆலயம் 95-ம ஆண்டு இடப்பெயர்வினால் அதிக சேதமடைந்தது. இது அடியவர் அனைவரதும் உள்ளத்தை உலுக்கியது. எமக்குக் கூட இடம்பெயர்ந்து வந்தபோது முன் மண்டபம் ஓடுகளற்று சேதமடைந்து இருந்ததை கண்டவுடன் கண்ணீர் பெருகியது. எம்பெருமான் எம் இல்லங்களைப் பாதுகாத்து வந்த ஷெல் எல்லாம் தன்னகத்தே ஏற்று காப்பாற்றினார்.

இத்தகைய சிறப்புமிக்க இவ் ஆலயப் புனரமைப்பு பணிகள் உள்ளங்களில் ஊற்றெடுக்க பரிபாலன சபையும் இவ் ஆலயப் பணியை செம்மைப்படுத்தினார். அடியவர்களும் வாரி வழங்கினர். பொருளாகவோ பணமாகவோ பல இலட்ச ரூபாவை அள்ளிக் கொடுத்தனர். சிலர் தாமாகவே சில வேலைகளை பொறுப்பேற்று செய்தனர். அதன் பயனாக ஆலயம் முற்றாக புனரமைக்கப்பட்டது. சுந்தர விமானம் உடைய மூலஸ்தானம், அலங்கார மண்டபம், தாமரைத் தடாக வசந்த மண்டபம் எழுந்தருளி சபா மண்டபங்கள், வைரவ மூர்த்தி ஆலயம், 25 அடி உயர மணிக்

கோபுரம், 63 அடி நீள சடையம்மா மடம் என்பன அமைக்கப்பட்டு அழகொழிரும் எழில்மிகு ஆலயமாக வளர்ந்துள்ளது. இவ் ஆலயம் வரலாறு காணாத வளர்ச்சியை ஓரிரு ஆண்டுகளில் எட்டியது.

சிறிய உள்வீதியை மட்டும் கொண்டிருந்த ஆலயம் திரு. ச. நடராசா வாத்தியாரதும் அவரது சகோதரர் குடும்பத்தினரது தாராள மன உறுதியினால் உள்வீதி, வெளிவீதி என இரு வீதிகளை கொண்ட ஆலயமாகியது. அன்னசத்திர மடங்கள் அற்றுப்போகும் இக் காலத்தில் அறுபத்து மூன்று நாயன்மார், தொகையடியார், ஏழத்து சித்தர்களது குருபூசை நடைபெறும் மடமும் அமைக்கப்பட்டுள்ளது. இவ் ஆலயம் இன்றுவரை மடாலயமாகவும் எழில் மிகு ஆலயமாகவும் திகழ்ந்து அடியவர் வினையகற்றி அருள் பாலித்து வருவதைக் காண முடிகின்றது.

## எங்கும் கணபதி

1. எல்லோராக்குகையில் உள்ள சித்திரங்களில் கணபதி உருவமுள்ளது.
2. ஜபல்பூர் பக்கம் உள்ள பீராகோட்டிலும் சுசீந்திரத்திலும் விநாயகர் பெண் வடிவில் உள்ளது. இது கஜானனி எனப்படும்.
3. கம்போடியாவில நிற்கும் கணபதி வடிவமுள்ளது,
4. கூர்ஜரத்தில் குடைக் கோயிலில் உள்ள கணபதியை ஜைனர்களும் வணங்குகின்றார்கள்.
5. கணபதி இருதயம் என்ற மந்திரத்தைப் பௌத்தர்களும் ஜெபிக்கின்றார்கள்.
6. பர்மா, ஸயாம், சம்பா, கம்போடியா, நேபால், திபெத், சைனா, துருக்கிஸ்கானம், கோடான், மங்கோலியா, ஜப்பான், முதலிய இடங்களிலும் விநாயக சிற்பங்கள் காணப்படுகின்றது.
7. ஜான்சி ஜில்லாவில் ஐந்தாம் நூற்றாண்டில் கட்டப்பெற்ற டேவுற்ரா கோவிலில் ஒரு விஷ்ணு உருவமுள்ளது. அதன் இடப்புறத்தில் விநாயகர் உருவமுள்ளது.

# ஈழத்துச் சித்தர் பரம்பரையில் ஆராயப்படவேண்டியவர் சடையம்மா சுவாமிகள்

## (மறைந்தும் மறையாத சடையம்மா சித்தரின் நினைவாக இவ் ஆலயத்தில் 63 அடி நீளமான மண்டபம் அமைக்கப்பட்டு இக் கும்பாபிஷேக நன்னாளில் திறந்து வைக்கப்படுவதையொட்டிய சிறப்புக்கட்டுரை)

ஈழத்தில் தோற்றம் பெற்ற சித்தர்களில் ஒருவரே சடையம்மா இவரைப் பற்றி கல்வியுலகும் ஆன்மீக உலகும் ஆராய வேண்டியது தலையாய கடமையாகும். அவ்வகையில் ஈழத்தின் முத்தென விளங்குபுகழ் யாழ்ப்பாணத்தின் அருகே அமைந்து வரலாற்றுச் சிறப்பைக் கொண்ட நல்லூர் இராஜதானி அருகே உள்ள திருநெல்வேலி கிழக்கில் உள்ள வீரசெங்குந்தர் பதியில் முருகனது புத்திமதிகளை தக்கமுறையில் எடுத்துக் கூறவல்லதான தூதுவராக நியமிக்கப்பட்ட நவவீரர்களின் தலைவரான வீரவாகுதேவர் ஆன உபசுப்பிரமணியர் என வேதாகமம் கண்டுள்ள முருகனது தம்பியின் பரம்பரையில் சடையம்மா அவர்கள் 1866-ல் அவதரித்தார்.

இவருக்கு பெற்றோர் இட்டழைத்த பெயர் முத்தம்மா என்பதாகும். உலகில் உள்ள சகல பொருட்களையும் பரீட்சிக்க விதிமுறைஉண்டு ஆயின் நவரத்தினங்களைமட்டும் பரீட்சிக்க எவ்விதிமுறைகளுமில்லை அத்தகைய நவரத்தினங்களாகிய நவவீரர்களின் சந்ததியை சேர்ந்தவராதலின் முத்தம்மா என்ற நாமம் சூட்டப்பட்டது. இவருடைய சகோதரியாக வள்ளியம்மை என்பவர் விளங்கினார். சகோதரிகள் இருவருமே சிறு வயது முதல் இறைவழிபாட்டிலே சிறந்து விளங்கினர். இன்நிலையிலே தமது வீட்டிலே சிறிய ஆலயமமைத்து வழிபட்டுவரலாயினர். பக்தியில் சிறந்த இவர்கள் பருவமடைந்ததும் இல்லற வாழ்வுக்குட்படுத்தப்பட்டனர்.

முத்தம்மாவும் இல்லற வாழ்விலே காசிப்பிள்ளையை கரம்பற்றி இரு பிள்ளைகளை பெற்றெடுத்து வளர்த்து வரும் நாளில் மெல்ல மெல்ல முருகனது அருட்பார்வை இவவை இழுக்கத் தொடங்கியது. இதன்பயனாக நல்லூரை அண்டி அம்முருகனுக்கு சரியைத்தொண்டு செய்து வரலானாள் முருகனுடன் தொடர்பு கொண்டமைக்கு காரணம் உண்டு இவ்முத்தம்மாவின் பரம்பரையே இன்றுவரை இந்தியாவிலும்சரி இலங்கையிலும்சரி மூர்த்தி, தலம், தீர்த்தம் ஒருங்கே அமையப்பெற்ற பல ஆலயங்களுக்கெல்லாம் கொடிச்சீலை வழங்கிவருவதைக் காணலாம் அவ்வகையில் நல்லூர் முதல் திருச்செந்தூர் வரை இவ்வழக்கம் இற்றைவரை பேணப்படுகின்றது. அத்துடன் சூரசங்காரத்திலும் இவர் பரம்பரையே நவவீரராகவிளங்கி வருவதையும் காண முடிகின்றது எனவே முருகனுடன் ஈடுபாடு கொண்டதற்கு இவை காரணமாக இருக்கலாம். பகுதிபகுதியாக தன்னை முருகனிடம் ஒப்படைத்த முத்தம்மாவின் மூத்தபிள்ளை இறந்ததும் முருகன் காட்சியளித்து பிள்ளைகள் நிலையில்லை என்னிடம்வா என அழைக்க அன்று முதல் துறவு பூண்டு நல்லூரிலையே வாழத்தொடங்கினார்.

இவ்வாறு துறவுநிலையில் இருந்தவேளை இரண்டாவது பிள்ளைக்கும் வருத்தம் வந்து படுக்கையில் இருந்தவேளை கணவன் இவவிடம் சென்று வரக்கூற போ அது தப்பாது எனக் கூறிதியானத்தில் இருந்ததாகவும் கணவன் வீட்டைடவர மகன் இறந்து விட்டதாகவும் அத்துடன் குடும்பவாழ்வை விடுத்து தியான நிலையைக்கொண்டு வரலானார். இவ்வாறு இருக்கும் போது தலைமுடிநீண்டு வளர்ந்து திரிபடையத்தொடங்கியது. நீள்சடையை உடைய உச்சிக்குடுமி கொண்டு காணப்பட்டதால் எல்லோரும் சடையம்மா என அழைக்கதொடங்கினர் என்பது வரலாறு. சடையம்மா யோகநிலையில் இருக்கும்போது தலை வீங்கும் பின் யோகமடங்க உச்சி வீக்கம் குறையும்.

இத்தகைய சித்துக்கள் கூடவே சடையம்மாவும் நல்லூரிலே சங்கமவழிபாடு நிகழ்த்துவதற்காக $1\frac{1}{2}$ பரப்புக்காணியை வாங்கி அடியவர்கள் வழங்கிய $4\frac{1}{2}$ ப்பரப்பு காணியையும் பெற்று 6 பரப்பிலே மடம் ஒன்றை அமைத்து பராமரித்து வரலானார். இன்நிலையிலே சடையம்மா திருச்செந்தூருக்கு சென்றபோது அங்கே முருகனை தரிசித்து வந்த மூதாட்டி ஒருவருக்கு முருகன் கனவிலே தோன்றி நம்மிடம் அடியவளொருத்தி வருகிறாள் ஆதரித்து அனுப்பு எனக் கூறியதாகவும் பின் சடையம்மா செல்ல அம் மூதாட்டி வரவேற்று உபசரித்ததாகவும் சடையம்மா தங்க ஒரு இடம் ஒதுக்கிக்கொடுத்ததாகவும் கூறப்படுகின்றது. பின் அவ்விடத்திலே சடையம்மாவின் பெயரால் மடம் அமைக்கப்பட்டு இன்றுவரை நிலைத்து இருக்கின்றது.

திருச்செந்தூரிலே சடையம்மாவை ஆதரித்த பெண் பின்னர் நல்லூரரை வந்தடைந்து சடையம்மாமடத்திலேயே தங்கியிருந்து இறைபதம் அடைந்தார். நல்லூரில் தேரடியருகே சடையம்மாவினால் அமைக்கப்பட்ட மடமே இன்று 63 நாயன்மார் குருபூசைமடம் என பெயர்மாற்றம் பெற்று விளங்குகின்றது. நல்லூரின் வடக்குவீதி ஒழுங்கையிலும் சடையம்மாமடக் காணி உள்ளதும் குறிப்பிடத்தக்கது. பின்னர் சடையம்மா சுவாமிகள் நகுலகிரியை அடைந்து அங்கேயும் ஒரு மடத்தை தனது சொந்த முயற்சியாலேயே ஸ்தாபித்தார். கதிர்காமக்கந்தன் மீதும் தீராத காதல் கொண்ட சடையம்மா அங்கேயும் சென்று தங்கியிருந்து பக்தியில் ஈடுபட்டார். அங்கும் சடையம்மாமடம் ஸ்தாபிக்கப்பட்டு பணியாற்றி வந்துள்ளது. காலப்போக்கில் இவ்விடம் அரசால் பொறுப்பேற்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

